[1972 ஏப்ரல் 3

Retired Government Servants in Forshore Estatr.

* 859. *Q.*—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Backward Clases be pleased to state—

(*a*) whether the Government have received representation from the retired Government Servants occupying quarters at the Foreshore Estate, Santhome, Madras City seeking alternative quarters about July-August, 1971; and

(*b*) the action taken thereon?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (ஆ) ஆம்.

(இ) விண்ணப்பதாரர்கள் குடிசைவாசிகளுக்கு மட்டும் ஒதுக்கீடு செய்வதற்காகக் கட்டப்பட்டிருந்த குடியிருப்புகளைக் கேட்டதனால் அவர்கள் விண்ணப்பம் மறுக்கப்பட்டது.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவரவர்களே, விண்ணப்பதாரர்கள் குடிசைவாசிகளுக்கு மட்டும் ஒதுக்கீடு செய்வதற்காகக் கட்டப்பட்டிருந்த குடியிருப்புகளைக் கேட்டதனால் அவர்கள் விண்ணப்பம் மறுக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு மீண்டும் பரிசீலனை செய்து ஓய்வு பெற்றவர்களுக்கு மாற்று வீடு தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அவர்கள் குடிசை மாற்று வாரியம் கட்டிய வீடுகளைக் கேட்டார்கள். ஓய்வு பெற்றவர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகளில் 3 மாதம் வரையில் குடியிருக்கலாம் என்ற முறையில் அந்த நிபந்தனையின் பேரில் அவர்களுக்கு அனுமதி வழங்கலாமே தவிர, அவர்களுக்கு மாற்று வீடு வேண்டுமானால் அவர்கள் வேறு விதமான முறையில் தவணைமுறையில் வீடுகள் வாங்கிக் கொள்ளலாம்; வேறு வழியில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, ஓய்வு பெற்ற அதிகாரிகளின் பிள்ளைகளோ. பெண்களோ இருந்தால் அவர்களுக்கு மாற்றித் தருவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா? அவர்களை வெளியேற்றாமல்.

1972 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, அரசாங்க அதிகாரிகளின் பிள்ளைகள் அரசாங்க பணியில் இல்லாதவர்களாக இருந்தால், அவர்களுக்கு மாற்று விடு தர ஏற்பாடு செய்ய முடியும்.

செஞ்சி வட்டத்திலுள்ள காட்டு நிலங்கள்.

* 860. **வினா—திரு. ரா. ரா. முனுசாமி** : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி வட்டத்தில் உள்ள காரை, செஞ்சி, பாடிபள்ளம், சென்றுலூர், எதப்பட்டு ஆகிய கிராமங்களின் அருகில் உள்ள தரைக்காடுகளை விவசாயம் செய்வதற்கென அங்குள்ள ஏழை விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. இராமன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவரவர்களே, செஞ்சி வட்டத்திலுள்ள காரை, செஞ்சி, பாடிபள்ளம், சென்றுலூர், எதப்பட்டு, வயலூர் ஆகிய கிராமங்களின் அருகில் ஆயிரக்கணக்கான தரைக் காடுகள் இருக்கின்றன. மரம் செடி இல்லாமல் காடுகள் பாழாகி இருக்கிறது. அந்தத் தரைக்காடுகளை அந்தப் பகுதியில் உள்ள ஏழை விவசாயிகளுக்குப் பகிர்ந்து அளித்தால் ஏழை விவசாயிகள் அதை உழுது பயன்படுத்த முடியும்; ஆகவே, அதைச் செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மேலும் காட்டு நிலங்கள் கொடுப்பது பற்றி அரசு பரிசீலனை செய்ய வேண்டும்.

மரம் வளர்ப்பு விழா.

* 861. **வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம்** : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—